1986 நவம்பர் 19]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு டையலைசர் கருவி ஏற்கெனவே வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே டையலைசிஸ் கருவி வாங்கப்பட்டிருப்பது உண்மைதான். இருந்தாலும் பல ஆண்டுகளாக அது பொருத்தப்படவில்லையென்பதை அரசு அறியுமா ? அதைப் பொருத்தாததினுடைய காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் பற்றிக் கொஞ்சம் தகராறு இருந்தது. அதெல்லாம் சரி செய்யப்பட்டு, 12-5-1986 முதல் செயல்பட்டு வருகிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரைச் சுத்தம் செய்கின்ற கருவி வாங்கிவிட்டார்களா ? அந்த டையலைசிஸ் கருவி இப்பொழுது பயன்படுத்தப்படுகிறதா ? மேலும் புற்று நோய்க்காக பயன்படுத்துகிற Deep X-ray Therapy இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, Haemo Dialysis கருவி இப்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தண்ணீர் பற்றிய பிரச்னை இப்பொழுது இல்லை. சுத்தம் செய்வது நடந்து கொண்டிருக்கிறது. மற்றைய கேள்வியைத் தனியாகக் கேட்டால் பதில் சொல்ல முடியும்.

நோயாளிகளுக்கு மலிவு விலையில் எக்ஸ்ரே படம்.

81—(*வினா எண் 4948) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நோயாளிகளுக்கு ஒரு ரூபாய் செலவில் எக்ஸ்ரே படம் எடுக்கும் தொழில் நுட்பக் கருவி ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உபயோகத்திற்கு வந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நமது மருத்துவமனைகளில் அதை பயன் படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்குத் தகவல் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எக்ஸ்-ரே மலிவாக எடுக்கிற நடைமுறையை சில மருத்துவ மனைகளிலே வைத்திருக்கிறார்கள். இப்பொழுது நாம் அரசாங்க மருத்துவமனையிலே ஒரு படம் எடுக்க வேண்டுமென்றால் அரசாங்கத்திற்கு ரூ. 40 செலவாகிறது. ஆனால், ரூ. 1-ல் எடுக்க முடியும் என்று கல்கத்தாவிலே என்.ஆர்.எஸ். வைத்தியக் கல்லூரியினுடைய ஜெபல்பூர் மருத்துவமனையில் பேராசிரியர் மனிஷ் முகர்ஜி கண்டுபிடித்துள்ளார். ரூ. 10,000 மதிப்புள்ள அந்தக் கருவியை கல்கத்தாவில் பல மருத்துவமனைகளில் வைத்திருக்கிறார்கள். பல்வேறு வகையிலும் பரீட்சித்துப் பார்த்து, தொழில் நுட்ப அறிஞர்கள் அதைப்பற்றி In clarity it is safe with a conventional X-ray Unit என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அங்கே அனுப்பியாவது இந்த நடைமுறையைக் கொண்டுவந்தால் ரூ. 1-க்கு எக்ஸ்-ரே எடுக்க முடியும் என்றால், ரூ. 1 கோடி, ரூ. 2 கோடியை அந்தத் துறையில் மிச்சம் செய்ய முடியும். அதுபற்றி துறை நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாாண்மிகு திரு. ப. உ சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தருவது புதிய தகவலாக இருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் தற்போது நோயாளிகளை எக்ஸ்-ரே படம் எடுக்கிறார்கள். எக்ஸ்-ரே படம் எடுத்த பின்னாலே, அந்த நோயாளி இன்னொரு மருத்துவரிடத்திலே போகும்போது, அந்த எக்ஸ்-ரே காப்பியை நோயாளி கேட்டால் கொடுக்க மாட்டேன் என்று மருத்துவமனையில் சொல்கிறார்கள். இப்படிச் சொல்வதற்கு அங்கே இருக்கிற அதிகாரிகளும் ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். இந்த எக்ஸ்-ரே பிலிம் தயாரிக்கிறபொழுது அதிலே சில்வர் நைட்ரேட் என்கிற இரசாயனப் பொருளைக் கலந்து வைத்துள்ளார்கள். ஆகவே, ஏ. ஜி. ஆடிட்டிலே ரூ. 1 இலட்சத்துக்கு எக்ஸ்-ரே பிலிம் வாங்கினால், ரூ. 10,000-க்காவது பழைய பிலிம்களை விற்று கணக்குக் காட்ட வேண்டுமென்று ஆடிட் ரிப்போர்ட்டிலே எழுதி விடுகிறார்கள். எனவே, பழைய பிலிம்களை நாங்கள் ஏலத்திற்கு விடுகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி ஏலம் விடுகிறபோது 10-ல் 1 பங்கு விலைக்குத்தான் போகிறது. அதே தொகையை நோயாளிகள் கொடுக்க விரும்பினால், நோயாளிகளிடமிருந்து அந்தத் தொகையை வசூலித்துக் கொண்டு, அரசு மருத்துவமனைகளிலே எடுக்கிற அந்த எக்ஸ்-ரே படங்களை நோயாளிகளுக்குக் கொடுப்பதற்குத் துறை விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த எக்ஸ்-ரே படங்கள் நோயாளிகளுக்குத் தேவைப்படும் என்ற நிலையிருந்தால் அதை என்ன விலைக்குக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி அரசு விரைவிலே ஆராய்ந்து முடிவெடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவம் பார்ப்பதற்கு மொத்த வருமானம் ரூ. 300 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்தி, ரூ. 600 என்று நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது எக்ஸ்-ரேயைப் பற்றியது. மற்றைய விவரங்கள் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் மருத்துவமனை.

82—(*வினா எண் 5016) திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டு கிராமத்தில் மருத்துவமனை கட்டுவதற்கு மக்கள் பங்கு தொகை ரூபாய் 50,000 செலுத்தப்பட்டும் மருத்துவமனை கட்டப்படாததற்கான காரணம் என்ன ?

(ஆ) மருத்துவமனை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : அரசு கிராம மருந்தகங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அவற்றில் ஒன்றான புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கோனாபட்டு கிராம மருந்தகம், ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோனாபட்டு கிராமத்திலே மருத்துவமனை வேண்டுமென்று கேட்டு, 12–12–1975-லேயே கிராம மக்கள் ரூ. 50,000 கட்டியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 11 வருஷம் ஆகிறது. 24–11–1978-ல் மருத்துவமனை கட்டும் திட்டம் ஆரம்பமாகியிருக்கிறது. 8 வருஷம் ஆகிறது. அந்த மருத்துவமனைக் கட்டிடத்திற்கு 2 ஏக்கர் 4 சென்ட் இடமும் 19–3–1978-லே முடிவு செய்யப்பட்டது. ஆனால், இதுவரையில் அங்கே மருத்துவமனை கட்டப்படவில்லை. அதைக் கருத்திலே